தி இந்து
தமிழால் இணைவோம்

**September 01, 2016**

CHENNAI
தி இந்து ◆ வியாழன், செப்டம்பர் 1, 2016

# பிரகாச இசை நடனம்

■ வா.ரவிக்குமார் ■

வணிகக் கப்பல் ஒன்று நடுக்கடலில் தத்தளித்தது. கப்பலிலிலிருந்த வணிகர்களையும், மாலுமிகளையும், ஒளி ஒன்று வழிநடத்திக் கப்பலைக் கரையில் சேர்த்தாக நம்பப்படுகிறது. அந்த ஒளி மறைந்த இடம்தான் லஸ் சர்ச் என அழைக்கப்படும் பிரகாச மாதா ஆலயம்.



▲ லஸ் சர்ச்

**லஸ் ஆன லுஸ்**

1516–ம் ஆண்டு போர்ச்சுக்கீசியர்கள் ஒரு ஆலயத்தைக் கட்டி, அதனை "லுஸ்' ஆலயம் என்று அழைத்தார்கள். "லுஸ்' என்றால் போர்ச்சுக்கீசிய மொழியில் ஒளி அல்லது பிரகாசம் என்று பொருள். லுஸ் என்ற வார்த்தையே மருவி இப்போது லஸ் சர்ச் என்றானது. இந்த ஆலயத்தின் 500–ஆவது ஆண்டு விழாவில் 'அன்புப் பணியில் ஆண்டுகள் 500' என்னும் தலைப்பில் ஒரு அரிய நிகழ்ச்சியை நடத்தினர் சென்னை, ஸ்டெல்லா மேரிக் கல்லூரி மாணவிகள்.

**ஆசிரியர் மாணவர் கூட்டணி**

மாதா ஆலயத்தின் தொன்மையையும் அதன் வரலாற்றையும் ஒருங்கே நம் கண் முன் அரங்கேற்றினர். கல்லூரியின் இணைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் உலகநாயகி பழனியின் வரிகளுக்கு மெட்டமைத்ததோடு மட்டுமில்லாமல் பரத நாட்டியம் ஆடுவதற்கேற்ற வகையில் பொருத்தமான தாளக் கட்டுகளுடன் கூடிய இசையை அளித்திருக்கிறார் எஸ்.ஜே. ஜனனி. இந்தப் பாடல்களுக்கு நாட்டியத்தை வடிவமைத்தவர் ஸ்ரீதேவி நிருத்யாலயாவைச் சேர்ந்த ஹரினி ஜீவிதா. ஹரினியும், ஜனனியும் கல்லூரியின் முன்னாள் மாணவிகள்.

**அமைதியின் பேருரு**

ஆலயத்தின் வரலாற்றையும் அருளாளர்களின் சிறப்பையும் மிக எளிமையான வார்த்தைகளாலும் அபரிமிதமான கற்பனையாலும் நிறைத்திருந்தார் பாடல்களை எழுதிய உலகநாயகி பழனி.

நாட்டிய நாடகம் என்பதால் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு பிரத்யேகமான ராகத்தில் அமைக்கப்பட்டிருந்தது. சில பாடல்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட ராகங்களுடன் ராகமாலிகையாக மாதாவின் புகழை ஒலித்தன.

**கருணையின் திருவுரு**

"நட்சத்திரங்களை விரல் விட்டு எண்ண முடியாது..." உன் அருளும் அதுவன்றோ என்னும் வரிகளை நடனத்தின் மூலம் காட்சிப்படுத்தியதிலும், 'வெறிச்சோடிக்'கிடந்த மக்களின் மனதில் நம்பிக்கை விதைக்கு நீர் ஊற்று என்னும் வரிகளை விளக்கியதிலும் மாதாவின் கருணையைக் கலையின் மூலம் கடத்தினர் மாணவிகள்.

கம்பீர நாட்டை, வாஸந்தி, பெஹாக் போன்ற பல ராகங்கள் சங்கமமான இந்த நிகழ்ச்சியில் நளினகாந்தி ராகத்தில் ஒரு சிறப்பான தில்லானாவையும் சேர்த்திருந்தனர். பூர்விகல்யாணி ராகத்தில் அமைந்த ஒரு விருத்தம் நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக அமைந்தது.



நாட்டியமாடிய மாணவிகள் (உள்படம்) இசையமைத்துப் பாடிய ஜனனி